


**12.04.2025**

**தலைப்பு செய்திகள்**

- தமிழகத்தின் முன்னேற்றத்திற்காக அஇஅதிமுக-வுடன் இணைந்து பிஜேபி செயலாற்றும் என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.
- சென்னை தேசிய கடல்வள தொழில்நுட்ப நிறுவனத்தை மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை இணை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திரசிங் இன்று ஆய்வு மேற்கொள்கிறார்.
- டெல்டா மாவட்டங்களில் மேற்கொள்ளப்படும் தூர்வாரும் பணிகள் அடுத்த மாத இறுதிக்குள் முடிவடையும் என்று மாநில உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கோவி செழியன் தெரிவித்துள்ளார்.
- நீலகிரி கோவை திண்டுக்கல் மாவட்ட மலை பகுதிகளின் ஓரிரு இடங்களில் இன்று கன மழைக்கு வாய்ப்பிருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
- ISL கால்பந்து இறுதியாட்டத்தில் இன்று மோகன் பஹான் அணி – பெங்களுரு அணியை எதிர்கொள்கிறது.

**இனி விரிவான செய்திகள்**

**பிரதமர்**

தேசிய ஜனநாயக கூட்டணியில் அஇஅதிமுக இணைந்திருப்பது மகிழ்ச்சி அளிப்பதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் தமிழ் கலாச்சாரத்தின் தனித்துவத்தை பாதுகாத்து தமிழகம் புதிய உச்சத்திற்கு கொண்டு செல்லப்படும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

அஇஅதிமுக-வுடன் இணைந்து பிஜேபி தமிழகத்தின் முன்னேற்றத்திற்காக செயலாற்றும் என்றும் திமுக அரசு வீழ்த்தப்படும் என்றும் பிரதமர் கூறியுள்ளார்.

**********

**முதலமைச்சர்**

இதனிடையே அஇஅதிமுக – பாஜக கூட்டணி தமிழகத்தில் தோல்வியை சந்தித்த கூட்டணி என்று திமுக தலைவரும் முதலமைச்சருமான திரு.மு.க.ஸ்டாலின் குறை கூறியுள்ளார்.

சென்னையில் இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த கூட்டணி அறிவிப்பின்போது தமிழகத்தின் சட்டம் ஒழுங்கு நிலைமை குறித்து தெரிவிக்கப்பட்ட கருத்திற்கு அவர் கண்டனம் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் வரும் 14ஆம் தேதி சமத்துவ நாளை ஒட்டி முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் 332 கோடி ரூபாய் மதிப்பிலான நல திட்ட உதவிகளை சென்னையில் வழங்க உள்ளார்.

பல்வேறு புதிய விடுதி கட்டிடங்கள் உள்ளிட்டவற்றையும் அவர் திறந்துவைக்க உள்ளார்.

49 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பயனாளிகள் இதன் மூலம் பயன்பெறுவர்.

**********

**ஜிதேந்திரசிங்**

சென்னை தேசிய கடல்வள தொழில்நுட்ப கழகத்தில் மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை இணை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திரசிங் இன்று ஆய்வு செய்கிறார்.

2047-ல் வளர்ச்சி அடைந்த பாரதம் தொடர்பான புதுமை தொழில்நுட்பங்கள் குறித்து இதில் ஆலோசிக்கப்படுகின்றன.

அறிவியல் தொழில்நுட்பத்தில் உலக அளவில் தலைமை நாடாக இந்தியாவை நிலை நிறுத்துவதற்கான நிலைப்பாடுகள் குறித்தும் இதில் விவாதிக்கப்படுகிறது.

**********

**பியூஷ்கோயல்**

அமெரிக்காவுடனான இருதரப்பு வர்த்தக ஒப்பந்தத்தை இறுதி செய்வதில் அவசர முடிவுகள் மேற்கொள்ளப்படமாட்டாது என மத்திய வர்த்தக தொழில்துறை அமைச்சர் திரு.பியூஷ்கோயல் தெளிவுபடுத்தியுள்ளார்.

புதுதில்லியில் 9ஆவது சர்வதேச தொழில்நுட்ப உச்சிமாநாட்டில் உரையாற்றிய அவர் நாடுகளுக்கிடையே வர்த்தக ஒப்பந்தங்களை செயல்படுத்தும் போது இருதரப்பும் பயன்பெறுவதன் அவசியத்தை சுட்டிக்காட்டினார்.

ஒப்பந்தங்களை செயல்படுத்துவதற்கான காலக்கெடுவில் இந்தியாவின் நலன் விட்டுக்கொடுக்கப்பட மாட்டாது என்று தெளிவுபடுத்திய அவர் 2047-ல் வளர்ச்சி அடைந்த பாரதம் இலக்கை நோக்கியே வர்த்தக ஒப்பந்த பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதாகவும் அவர் கூறினார்.

**********

## நிர்மலா சீதாராமன்

இந்தியா - ஆஸ்திரியா இடையே ஸ்டார்ட் அப் நிதி, பசுமை தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் ஒத்துழைப்பின் அவசியத்தை மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் வலியுறுத்தியுள்ளார்.

ஆஸ்திரிய தலைநகர் வியன்னாவில் வெளிநாடுவாழ் இந்தியர்கள் இடையே உரையாற்றிய அமைச்சர் அந்நாட்டின் வளர்ச்சியில் இந்திய வம்சாவளியினரின் வலுவான பங்களிப்பை பாராட்டினார்.

இந்தியாவின் வளர்ச்சிக்கும் ஆஸ்திரியாவில் வசிக்கும் இந்தியர்கள் பங்காற்ற அவர் அழைப்பு விடுத்தார்.

ஆஸ்திரிய நிதியமைச்சருடனான தமது சந்திப்பால் இருதரப்பு நட்புறவு மேம்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

சுற்றுச்சூழலுக்கு உகந்த வாகன மேலாண்மை, புதுப்பிக்கதக்க எரிசக்தி உள்ளிட்ட துறைகளில் இருநாடுகளும் இணைந்து செயலாற்றுவதற்கான வாய்ப்புகள் குறித்து ஆராயப்பட்டதாகவும் நிதியமைச்சர் தெரிவித்தார்.

**********

## துப்பாக்கி சூடு

சட்டிஸ்கட் மாநிலம் பீஜப்பூர் மாவட்டத்தில் பாதுகாப்பு படையினர் மற்றும் மாவோயிஸ்ட்டுகளுக்கு இடையே நடைபெற்ற துப்பாக்கி சூடு சம்பவத்தில் 3 தீவிரவாதிகள் உயிரிழந்தனர்.

மத்திய ரிசர்வ் காவல் படையினர், சட்டிஸ்கட் மாவட்ட ரிசர்வ் காவலர்கள், அதிரடி படையினர் உள்ளிட்டோர் வனப்பகுதிகளில் மேற்கொண்ட சோதனையின்போது இச்சம்பவம் நேரிட்டது.

உயிரிழந்தோரிடமிருந்து ஏராளமான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன

தொடர்ந்து அப்பகுதியில் தேடுதல் வேட்டையை பாதுகாப்பு படையினர் முனைப்புடன் மேற்கொண்டுள்ளனர்.

**********

**ஆளுநர்**

சிவகங்கை மாவட்டம் நாட்டரசன் கோட்டை கம்பர் சமாதி அருட்கோவிலில் நடைபெற்ற பங்குனி திருவிழாவில் தமிழக ஆளுநர் திரு.ஆர்.என்.ரவி பங்கேற்றார்.

காரைக்குடியில் நடைபெற்ற கம்பன்விழாவின் ஒருபகுதியாக கம்பராமாயண பாராயண நிகழ்விலும் ஆளுநர் கலந்துகொண்டு மாணாக்கருக்கு பரிசுகளை வழங்கினார்.

**********

**கோவி செழியன்**

டெல்டா பாசனத்திற்காக வரும் ஜூன் 12ஆம் தேதி மேட்டூர் அணை திறக்கப்படும் என மாநில உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கோவி செழியன் தெரிவித்துள்ளார்.

தஞ்சை மாணப்பாடி பாகவதபுரம் உள்ளிட்ட பகுதிகளில் தூர்வாரும் பணிகளை இன்று தொடங்கிவைத்து பேசிய அவர் கடைடை பகுதிகளுக்கும் தண்ணீர் சென்றடையும் வகையில் அடுத்த மாத இறுதிக்குள் தூர்வாரும் பணிகள் முடிவடையும் என்றார்.

27 கோடி ரூபாய் மதிப்பில் தஞ்சை மண்டலத்தில் ஆறுகள், கால்வாய், வாய்க்கால் மற்றும் வடிகால்களில் தூர்வாரும் பணிகள் நடைபெறுவதாக தெரிவித்த அவர் திருவையாறு புறவழிச்சாலை விரைவில் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும் என்றார்.

**வாய்ஸ்**

**********

## செந்தில் பாலாஜி

கரூர் மாநகராட்சியில் சீரான குடிநீர் விநியோகத்திற்காக 118 கோடி ரூபாய் மதிப்பில் குடிநீர் திட்ட பணிகள் நடைபெற்று வருவதாக மாநில மின்சாரத்துறை அமைச்சர் திரு.செந்தில் பாலாஜி தெரிவித்துள்ளார்.

கரூரில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் கட்டளை காவிரி ஆற்றுப்பகுதியில் இரண்டு கோடி ரூபாய் மதிப்பிலான மேம்பாட்டு பணிகள் நடைபெற உள்ளதாகவும், இதன்மூலம் 3 நாட்களுக்கு ஒருமுறை குடிநீர் விநியோகம் நடைபெறும் என்றார்.

கரூர் புதிய பேருந்து நிலைய கட்டுமான பணிகள் விரைவில் முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

**********

## மா.சுப்பிரமணியன்

தமிழக அரசு சுகாதாரத் துறை மேம்பாட்டிற்கான பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக மாநில மருத்துவம், மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

காஞ்சிபுரம் ஒன்றியம் திருப்புட்குழி அரசு ஆரம்ப சுகாதார வளாகத்தில், புதிய மருத்துவமனை கட்டடங்களை இன்று திறந்து வைத்துப் பேசிய அவர், இதன்மூலம் ஏராளமான மக்கள் பயனடைந்து வருவதாக கூறினார்.

மாநில கைத்தறி, துணிநூல் துறை அமைச்சர் திரு.காந்தி உள்ளிட்டோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

**********

## சமரச நாள்

நாகையில் நீதிபதிகள் சமரச நாள் விழாவை ஒட்டி சமரசம் மையம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

சமாதானம், நல்லிணக்கம், பரஸ்பர புரிதல், ஆகியவற்றின் அடிப்படையில் வழக்குகளுக்கு தீர்வு காணும் சமரச தீர்வு மையத்தின் பயன்கள் குறித்து நீதிபதிகள் பொதுமக்களிடம் துண்டுபிரசுரங்களை வழங்கி விழிப்புணர்வை ஏற்படுத்தியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

## வாய்ஸ்

**********

**தேசிய காச நோய் ஒழிப்பு**

சிவகங்கை மாவட்டத்தில் தேசிய காச நோய் ஒழிப்பு திட்டத்தின் கீழ் ஆறாயிரத்து 278 நோயாளிகளுக்கு ஒருகோடியே 57 லட்சம் ரூபாய் ஊட்டசத்து உதவிதொகை வழங்கப்பட்டதாக ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித் தெரிவித்தார்.

**இதுகுறித்து எமது செய்தியாளர்**

**வாய்ஸ்**

**********

**மீன்விலை**

தூத்துக்குடி திரேஸ்புரம் நாட்டுபடகு மீன்பிடி துறைமுகத்தில் சீலா, ஊழி, பாறை, வாழை உள்ளிட்ட மீன்களின் விலை அதிகரித்துள்ளதால் மீனவர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**வாய்ஸ்**

**********

இருவரி

**உலக பிரசித்தி பெற்ற தஞ்சை கலை ஓவிய** சித்திரை சந்தை 2025 கண்காட்சி தஞ்சை அரண்மனை வளாகத்தில் இன்றுமுதல் 3 நாட்களுக்கு நடைபெறுகிறது.

**திருப்பத்தூர் மாவட்டத்தில் அரசின் மணிமேகலை** விருதுபெற வரும் 30ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் என ஆட்சித்தலைவர் திருமதி சிவசௌந்தரவள்ளி தெரிவித்துள்ளார்.

**சுதந்திர போராட்ட தியாகியும், தமிழ் அறிஞருமான** அண்ணல் தங்கோ-வின் பிறந்த நாளை முன்னிட்டு வேலூர் மாவட்டம் குடியாத்தம் நேரு பூங்காவில் உள்ள அண்ணாரின் திருவுருவ சிலைக்கு தமிழக அரசு சார்பில் ஆட்சித்தலைவர் திருமதி சுப்புலெட்சுமி உள்ளிட்டோர் மரியாதை செலுத்தினர்.

**தூத்துக்குடி மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர் நாள்** கூட்டம் வரும் 17 ஆம் தேதி நடைபெறுவதாக ஆட்சித்தலைவர் திரு.இளம்பகவத் தெரிவித்துள்ளார்.

**********

**வானிலை**

மேற்கு திசை காற்றின் வேகமாறுபாடு காரணமாக நீலகிரி கோவை திண்டுக்கல் மாவட்டங்களின் மலை பகுதிகளின் ஓரிரு இடங்களில் இன்று கன மழைக்கு வாய்ப்பிருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழக கடலோரம், மன்னார் வளைகுடா குமரிக்கடல் பகுதிகளில் பலத்த சூறாவளிக்காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**********

**கோவில்**

**ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி** திருக்கோவில் ஆதி பிரம்மோற்சவ திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியான தேரோட்டம் இன்று நடைபெற்றது.

**********

**கால்பந்து**

ISL கால்பந்து போட்டியில் கொல்கத்தாவில் இன்று இரவு ஏழரை மணிக்கு நடைபெறும் இறுதியாட்டத்தில் மோகன் பஹான் அணி – பெங்களூரு அணியை எதிர்கொள்கிறது.

**********

**கிரிக்கெட்**

ஐ.பி.எல் 20-20 கிரிக்கெட் போட்டியில் லக்னோவில் இன்றுபிற்பகல் மூன்றரை மணிக்கு லக்னோ சூப்பர் ஜெயன்ஸ் - குஜராத் டைட்டன்ஸை எதிர்கொள்கிறது.

ஹைதராபாத்தில் இரவு ஏழரை மணிக்கு நடைபெறும் மற்றொரு ஆட்டத்தில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் - பஞ்சாப் கிங்ஸ்க்குடன் மோதுகிறது.

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**